சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**அசல் வழக்கு எண்.84/2018**

வாதி தரப்பு சாட்சி வா.சா.3 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. K. ரெஜினா, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. ராஜபூபதி | த/பெ: ராமமூர்த்தி |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 02.09.2025 | தாலுக்கா: |

முதல் விசாரணை ..

இவ்வழக்கில் வாதி தரப்பு 3 ஆம் சாட்சி ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி நிறுவனத்தில் நான் கலெக்சன் ஏஜென்டாக பணிபுரிய வழங்கப்பட்ட உத்தரவு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி ஏஜென்சியில் பிரதிவாதி வரவு செலவு குறித்து கணிணியில் நான் பராமரிப்பு செய்யவில்லை. கணிணி இயக்குவதற்கு தனியாக ஆட்கள் உள்ளார்கள். வாதி ஏஜென்சியிலிருந்து எனக்கு வழங்கப்பட்ட சம்பள சான்றிதழ் மற்றும் பணிபதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாதி ஏஜென்சியில் கலெக்சன் ஏஜென்டாக பணிபுரியவில்லை என்றாலும் வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கலெக்சன் ஏஜென்ட் என்ற முறையில் கணிணி பராமரிப்பு செய்துவருகிறேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதியிடம் பாக்கி தொகையை திரும்ப கேட்டுள்ளேன். ஆனால் பிரதிவாதி கடையிலிருந்து பல பொருட்கள் திரும்ப எடுக்காமல் இருந்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வாதி ஏஜென்சி

**உரிமையாளர் பொருட்களை கடையிலிருந்து எடுத்து வர சொன்னால் எடுத்து வருவேன். பிரதிவாதி கடையிலிருந்து எடுக்க வேண்டிய பொருட்கள் அவர் வசம் இருந்தது என்றால் சரிதான்.**

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.